பிடிப்பதுதான் என்னுடைய வேலை. பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இங்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பிரச்னையை விட்டுவிட்டு பத்திரிகையிலே வந்திருப்பதைக் கேட்பது நியாயம் இல்லை. அவையிலே நடப்பதை வைத்துத்தான் சொல்ல முடியும்.

திரு. ஏ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42-வது விதியின்கீழ் அனுமதிப்பதும் அனுமதிக்காததும் என் இஷ்டம். அதை இங்கே கேட்க முடியாது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். திரு. ரகுமான்கான் பேசியவை அத்தனையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

5. ஒத்திவைப்பு தீர்மானம்.

பேருந்துகளில் 'டெக்கோ-மீட்டர்' என்னும் கருவியைப் பொருத்த வேண்டுமென்ற அரசு உத்தரவினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 'டாகோகிராப்' என்னும் கருவியை எல்லா வாகனங்களிலும் பொருத்த வேண்டும் என்னும் அரசின் உத்தரவினால் ஏற்பட்டுள்ள "விளைவுகள் குறித்தும், என்ன விலை கொடுத்தாலும் அக்கருவி கிடைக்காமல் இருப்பது குறித்தும்" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு அவர்களும், திரு. துரைமுருகன் அவர்களும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, எல்லா மோட்டர் வாகனங்களுக்கும் டாகோகிராப் என்ற கருவியைப் பொருத்த வேண்டுமென்று ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவைத் தற்பொழுது அமுல்படுத்துகிற முறையிலே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனால் தகுதிச் சான்றிதழ் வாங்க வருகின்ற

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப பெற்றது.

வாகனங்களும், பதிவு செய்ய வருகின்ற வாகனங்களும் எப். சி. ரிஜிஸ்டிரேஷன் எடுக்கப்பட முடியாத நிலையிலே இருக்கின்றன. பல வாகனங்களிலே, டி. வி. எஸ். நிறுவன வாகனங்களிலே கூட இந்தக் கருவிகள் பொருத்தப்படாததால், அவர்களால் கூட வண்டிகளை எடுக்க முடியவில்லையென்று சொல்லப்படுகிறது. இந்த டாகோகிராப் ஒரே ஒரு கம்பெனியிலே செய்யப்படுகிறது.

அதாவது, பெங்களூரிலே இருக்கிற என். கே. எப். கம்பெனியிலே மாத்திரம் ஏகபோகமாகச் செய்யப்படுகிறது. வேறு எங்கும் கிடைக்கவில்லை. அந்தக் கருவிகளை விற்பனை செய்வதற்காக, மத்திய அரசாங்கத்தை அணுகி, எப்படியோ, எல்லா வாகனங்களுக்கும் பொருத்த வேண்டுமென்ற முறையில் அவர்களை ஆணையிட வைத்து, அந்தக் கருவிகளை எடுக்க வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் வந்திருக்கிறது. இப்படி ஏகபோகக்காரர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிற காரணத்தால், ரூ. 10-க்கு விற்றுக்கொண்டிருந்த கிராப், இன்று ரூ. 95-க்கு விற்கிறது. இந்தக் கருவியைப் பொருத்துவதற்கே ரூ. 130 கேட்கிறார்கள். இந்தக் கருவியின் விலை ரூ. 1,300-லிருந்து ரூ. 3,000 வரையில் என்று சொல்கிறார்கள். அதுகூட கிடைக்கவில்லை.

மோட்டார் வாகனங்கள், தகுதிச் சான்றிதழ் பெறவும் பதிவு செய்யவும் வரும்போது, அவற்றைப் பொருத்தியிருக்க வேண்டுமென்று சொல்வதால், பெருத்த இன்னல் ஏற்படுகிறதென்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இந்தவிதமான விளைவுகள் ஏற்பட்டுள்ளதால், ஏகபோகக்காரர்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய இந்தக் கருவியைப் பொருத்தவேண்டிய அவசியமில்லை.

தமிழ் நாட்டிலே, இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கும் போது, டாகோகிராப் கருவியைப் பொருத்த வேண்டுமென்ற திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்து, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்காகத்தான் அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1978 மார்ச் 11

4-2-1975 அன்று நடைபெற்ற போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் மாநகர மற்றும் நகரத் தடங்களில் ஓடும் பேருந்துகளைத் தவிர ஏனைய புதிய பயணிகள் பேருந்துகள் அனைத்திலும் இக்கருவி பொருத்தப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. இக்கருவிகள் தயாரிக்கும் இன்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் என்ற நிறுவனம் ஒன்று ரூ. 1,725 என்ற விலையில் தேவைக்கேற்ப ஆண்டொன்றுக்கு 10,000 கருவிகள் தயாரித்துக் கொடுக்க முடியுமென்று 1976 பிப்ரவரி திங்களில்

(முற்பகல் 10-10)

கூறியது. இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி எண் 325-ஏ என்ற திருத்திய விதியின் வரைவு 5-6-1976 அன்று வெளியிடப்பட்டது. 1975-ஆம் ஆண்டு கேரள அரசு நகர மற்றும் சாதாரண பயணப் பேருந்துகள் நீங்கலாக ஏனைய எல்லா அரசு மற்றும் தனியார் பேருந்துகளிலும் "டேக்கோ மீட்டர்" பொருத்தப்படவேண்டும் என்று ஆணை யிட்டு நடைமுறையில் உள்ளது.

சென்ற ஐந்து ஆண்டுகளாக மராட்டிய, கர்நாடக மாநிலங் களில் பேருந்துகளில் "டேக்கோ மீட்டர்கள்" பொருத்தப்பட்டு வருகின்றன. தற்சமயம் டேக்கோ மீட்டர் தயாரித்துக் கொண் டிருக்கும் பெங்களூர் நிறுவனம் தேவைக்கேற்ப எத்தனை கருவிகள் வேண்டுமானாலும் விற்பனைக்குத் தர இயலும் என்று கூறியுள்ளது. ஏற்கனவே தயாரித்துக் கொண்டிருக்கும் நிறுவனத்தின் உற்பத்தித்திறனை விரிவுபடுத்தினுல் தேவையைப் பூர்த்தி செய்து விடமுடியும் என்ற கருத்து 1974-ல் தெரிவிக்கப் பட்டது. டெல்லியில் ஒரு நிறுவனம் டேக்கோ மீட்டர் உற்பத்தி செய்கின்றது. ஆனல் டான்சி என்ற அரசு நிறுவனமும் சோன் பொறியியற் கழகமும் 'டேக்கோ மீட்டர்' தயாரிக்கும் திறன் பெற்றுள்ளன. டான்சி, சேர்ன் போக்குவரத்துக் கழகம் போன்ற நிறுவனங்களும் டேக்கோ மீட்டர் உற்பத்தியிலே ஈடுபடுவது பற்றிய பரிசீலனையை அரசு மேற்கொண்டது. 1,725 ரூபாய் விலையுள்ள இக்கருவி கட்டாயமாக, உடனடியாகப்பொருத் தப்படுவதற்கு, நியாய விலையில் உடனடியாகக் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மை. எனவே,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் அதிவேகமாகச் செல்வதைக் கட்டுப் படுத்தவும் பொருள்கள் ஏற்றிச் செல்லும் பேருந்துகளால் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடனும் அனைத்து மாநிலங்களின் சாலை போக்குவரத்து வளர்ச்சி மற்றும் திட்டக்குழு 1967-ம் ஆண்டில் பேருந்துகளில் "டேக்கோ மீட்டர்" என்னும் கருவியைப் பொருத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்தது. இக்கருத்தினை ஏற்று 1969-லேயே, தமிழக அரசு உள்துறை ஆணை 2869 மூலம் 13-11-1969 அன்று 1940-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வாகன விதி எண் 325 திருத்தப்பட்டது.

நகரத் தடங்களில் ஓடும் பேருந்துகள் மற்றும் வாடகைக் கார்கள் தவிர ஏனைய போக்குவரத்து வாகனங்களிலும் "டேக்கோ மீட்டர்" பொருத்தப்படவேண்டுமென்று இத்திருத் தத்தின் மூலம் ஆணையிடப்பட்டது. 1971-ம் ஆண்டில் இவ் வாணையைப் பரிசீலனை செய்து குறிப்பிட்ட சில புதிய பேருந்து களில் முதலில் இக்கருவியைப் பொருத்தலாம் என்றும் மற்ற பேருந்துகளில் பின்னர் சில கட்டங்களில் பொருத்தலாம் என்றும் அரசு முடிவு செய்தது. மேலும் அண்மையில் பதிவு செய்யப்படும் பேருந்துகளை முதலில் வற்புறுத்தலாம் என்றும் இக்கருவிகள் போதிய அளவில் கிடைப்பதைப் பொறுத்து விரைவுப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் முதலியவற்றில் ஒரு கட்டத்திலும் அதன் பிறகு சாதாரண பயணிகள் பேருந்து களிலும் இக்கருவியைப் பொருத்தச் செய்யலாமென்றும் அரசு கருதியது.

பொதுவாக, சாலை பாதுகாப்புக்காகவும் மிக வேகமாக ஊர்திகளை ஓட்டுவதால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதற் காகவும் பேருந்துகளில் இக்கருவி பொருத்தப்பட வேண்டியது அவசியமென்றும் அதே சமயம் எல்லாவிதமான போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாய் இருந்ததாலும் கருவியைத் தயாரிக்கும் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 6,000 கருவிகள் மட்டுமே என்று குறைவாகயிருந்ததாலும் முதலில் பயணிகள் பேருந்துகளில் மட்டும் இக்கருவியைப் பொருத்தலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டது.

1978 மார்ச் 11] *[திரு. சி. பொன்னையன்]*

இந்த ஆணையைச் செயல்படுத்த வேண்டாம் என்று பலர் கோரிக்கைகள் விடுத்திருப்பதால் டேக்கோ மீட்டர்களும், டேப்புகளும் தாராளமாக கிடைக்கும் வரை இக்கோரிக்கைகளை ஏற்று, திருத்திய 325-எ விதி செயல் படுவதை 30-6-78 வரை ஒத்தி வைக்கலாம்.

எனவே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க இப்பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினுல் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்கள் பிரச்னை குறித்து.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 தமிழாசிரியர்கள் பணியிறக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டு அமைச்சர் அவர்கள் அறிக்கை வைப்பதாகச் சொன்னூர்கள். துணை சபாநாயகர் அவர்கள்கூட அன்றைக்கு இருந்தார்கள். அந்த அறிக்கையை எப்போது வைப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தத் தீர்மானத்தைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பெயரும் இந்த சட்டமன்றத்திலே சொல்லப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அது ஒத்திவைப்புத் தீர்மானமாக இங்கே எழுப்பப்பட இருந்தது. ஆனுல், ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்த நேரத்திலே, இந்த அவையிலே உறுப்பினர்கள் யாரும் இல்லாததால் அது சொல்லப்படாமல் போய்விட்டது. மறுபடியும் இந்த அவையிலே அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.